# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>

2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

<u>பொருள்கள்</u>

1) நகராட்சி கட்டிடங்களுக்கு தீயனைப்பு கருவிகள் பொருத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் எண் இ1/68060/05 நாள் 23–12–05ல் அறிவுருத்தப்பட்டுள்ளது. எனவே இதன் அடிப்படையில் தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் நான்கு இடத்தில் பொறுத்துவதற்கு பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) தூத்துக்குடி நகராட்சி அலுவலகத்தில் | – | 4 எண்ணம் |
| 2) சிவன் கோவில் நகராட்சி கல்யாண மண்டபத்தில் | – | 1 எண்ணம் |
| 3) சத்திரம் தெரு நகராட்சி அண்ணா திருமண மண்டபத்தில் | – | 1 எண்ணம் |
| 4) தாய் சேய் நல மருத்துவமனையில் | – | 3 எண்ணம் |
| 5) பேருந்து நிலையத்தில் | – | 1 எண்ணம் |
| மொத்தம் | – | 10 எண்ணம் |

எனவே மேற்கண்ட தீயணைப்பு கருவிகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் கடிதம் ந.க.எண்.11988/05/அ1 நாள் 4–1–2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவை மற்றும் நீலகிரி மாவட்ட சிறுதொழில் சேவை தொழில் கூட்டுறவு சஙக நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாஙகுவதற்கும் அதற்கான செலவினம் ரூ.55000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவுனம் நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ5/000975/08

<u>**தீர்மானம் எண்: 54**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புதல் அளிக்கப்பட்டது

2) இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டி.எம்.பி.காலனி பகுதியில் சிறு பாலஙகளில் புதியதாக (Ramp) ராம்ப் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 1,15,000/–க்கு ரூபாய் ஒரு இலட்சத்தி பதினைந்தாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மன்றம் அனுமதிக்கலாம்

ம.ப.எண்.195/07–08

**<u>தீர்மானம் எண்: 55</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3) இந்நகராட்சி வார்டு எண் 4, இன்னாசியார்புரம் கதவு எண் 44/3ன் அருகில் புதிதாக W.M.E.சர்ச் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் பொது மக்களின் வழிபாட்டு ஸ்தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் இக்கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் எண் 1920 அத்தியாயம் IV 86(a) விதியின்படி சொத்துவரி விதிப்பில் இருந்து வரிவிலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

அ2/19634/07

**<u>தீர்மானம் எண்: 56</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4) இந்நகராட்சிக்கு சொந்தமான GLR பம்பிங் ஸ்டேசன் அமைந்துள்ள 35 கு.வே. திறன் சென்ரிபியூகல் பம்ப்செட்டின் பம்ப் பழுது சரி செய்ய (கன்மெட்டலில் புஷ், சிலிங, கிளாண்ட் புதியது கடைந்து இரண்டு எண்ணம் பியரிங மாற்றி ஷாப்ட், இம்ப்பெல்லர் ரீகண்டிசன் செய்து பம்ப்பை நல்லமுறையில் இயக்கி காண்பிக்கும் பணி) ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.21500/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

இ3/001635/08

**<u>தீர்மானம் எண்: 57</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5) இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 250 கே.வி.ஏ. ஜெனரேட்டரில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கும் பணிக்கு (எக்ஸைட்டர் ஸ்டேட்டர் ரோட்டர் மற்றும் ஏவிஆர் மாற்றும் பணி) அவசர அவசியத்தை முன்னிட்டு பிரிவு 15ன் கீழ் செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூ.85062/— மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம்

இ3/025471/07

**<u>தீர்மானம் எண்: 58</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

6) இந்நகராட்சி வார்டு எண் 20, வரிவிதிப்பு எண் 201371, பீச்ரோடு கட்டிடத்தில் இயஙகி வந்த தமிழ்நாடு மின்சார வாரியம் 30—8—2000ல் காலி செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் 1—9—2000 முதல் மேற்படி கட்டிடம் விழாக்காலஙகளில் மதவழிபாட்டு காரியஙகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 அத்தியாயம் IV பிரிவு 86(c)ன்படி மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவும், ஏற்கனவே 1—9—2000 முதல் 2007—08 IIம் அரையாண்டு வரை உள்ள சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.1,79,298/—ஐ ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

அ8/17367/05

**<u>தீர்மானம் எண்: 59</u>**

சொத்துவரி நிலுவைத் தொகையினை செலுத்தும்பட்சத்தில் நடப்பு ஆண்டு முதல் சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

7) இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்றும் நிலையத்தில் சுப்பையா பார்க் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் 40கு.வே திறன் மின் மோட்டாரின் காயில் சுற்றும் பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு பிரிவு 15ன் கீழ் செலவிடப்பட்ட செலவித் தொகை ரூ.14,000/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம்

இ3/022310/07

**<u>தீர்மானம் எண்: 60</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

8) இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்றும் நிலையத்தில் மில்லர்புரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் 25 கு.வே. திறன் மின் மோட்டாரின் காயில் சுற்றும் பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு பிரிவு 15ன் கீழ் செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூ.11,500/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம்

இ3/022309/07

**<u>தீர்மானம் எண்: 61</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

9) இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் தெரு கழிவு நீர் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 7.5 கு.வே. திறன் வெர்டிகல் பம்ப்பின் சிலீவ் புஷ் புதியது கடைந்து 4 எண்ணம் பியரிங மாற்றி ஷாப்ட், இம்ப்பெல்லர் ரீ கண்டிசன் செய்து யூனிவெர்சல் ஜாயிண்ட் 4 எண்ணம் மாற்றி மேற்கூறப்பட்ட அனைத்தையும் பழுது நீக்கி சரிசெய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.24,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

இ3/001634/08

**<u>தீர்மானம் எண்: 62</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10) இந்நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில் "மலேரியா கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்க ஓராண்டிற்கு (2008) தேவையான எரிபொருள் டீசல் 2880 லிட்டர், பெட்ரோல் 480 லிட்டர் தேவையாக உள்ளது. இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1.50 லட்சம் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு: 1) அனுமதிக்கலாம்

2) பொது சுகாதார அவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

எச்3/1437/08

**<u>தீர்மானம் எண்: 63</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

11) இந்நகராட்சி கணனி வரிவசூல் மையத்திற்கு தேவையான பேட்டரி வாங்குவதற்கு 4–1–2008ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | பேட்டரி ஒன்றிற்கான விலை (Model PPT 1500 UPS Pace Terminal New Battery) |
|---|---|---|
| 1 | பொன் செல்வன் பேட்டரி ஒர்க்ஸ்.<br>236,W.E.ரோடு, தூத்துக்குடி | ரூ.10900/– |
| 2. | சக்தி ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ்,<br>112/7ஏ,எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி | ரூ.10,900/– |
| 3. | எம்.எம்.பவர் பேட்டரி டிரேடர்ஸ்,<br>42,ஜின் பேக்டரி ரோடு, தூத்துக்குடி | ரூ.10,693/– |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) பேட்டரி வாங்குவதற்கான செலவிம் நகர்மன்றத் தீர்மான எண் 784 நாள் 24–12–07ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.
2) மேற்கண்ட மூன்று ஒப்பபநதப்புள்ளிகளில் எம்.எம்.பவர் பேட்டரி டிரேடர்ஸ் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ள்ள குறைவாக இருப்பதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

அ1/25368/07

**<u>தீர்மானம் எண்: 64</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஏற்றுக்கொள்ளப்பட்டது

12) இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 63ஐ உரிமம் பெற்ற திருமதி பமா காளிதாஸ் என்பவரின் உரிமம் மே 2004 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. அன்னாரின் பெயரில் உள்ள முன்பணம் ரூ.5000/– மற்றும் நான்கு மாத வாடகை கூடுதல் வைப்புத் தொகை ரூ.3280/–ம் காலம் கடந்த வைப்பு தொகையில் உள்ளதால் அதை அன்னாரின் பெயரில் உள்ள வாடகை நிலுவைக்கு ஈடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

அ16/12761/04

**<u>தீர்மானம் எண்: 65</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பைகளை அள்ளி தருவைக்குளத்திற்கு கொண்டு சேர்க்கும் டிராக்டர், டிப்பர் வண்டிகளுக்கு தார்பாய், வகைகள் ஏதும் இல்லாமல் அவை செல்லும் வழிகளில் குப்பைகள் சிதறி பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே குப்பை வண்டிகளுக்கு நைலான் தார்பாய்கள் வாங்க ஒரு நைலான் தார்பாயின்

தோராய விலை ரூ.1250/— வீதம் 10 வண்டிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.12500/—ஐ பொது நிதியிலிருந்து பெற்று வாஙகிக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

எச்3/2008/08

**<u>தீர்மானம் எண்: 66</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14) இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டோபிகானா பொது கழிப்பிடம் மராமத்து செய்யும் பணிக்கு தயாா் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.55,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

ம.ப.எண்.223/07—08

**<u>தீர்மானம் எண்: 67</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளும்) விதிகள் 2000ன்படி முதன்மை சேகரிப்பில் வீட்டளவில் குப்பைகளை பிரித்து வாஙகும் பணிக்கு தற்போது சுமாா் 50 மூன்று சக்கர சைக்கிள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் தினந்தோறும் குறைந்தது நான்கு முதல் ஐந்து வாகனஙகள் பஞ்சா், டையா் சேதாரம், டியூப் வெடித்தல், செயின் அறுந்து போதல் போன்ற காரணஙகளுக்காக பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனால் பணிகள் அடிக்கடி பாதிக்கப்படுகிறது.

மூன்று சக்கர சைக்கிளில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது சாிசெய்து உடன் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே தற்போது பொது சுகாதார வாகனப் பணிகளை கவனித்து வரும் துப்புரவு ஆய்வாளருக்கு அலுவலக முன் பணமாக ரூ.2000/— (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழஙகவும், அவருக்கு ஒரு சைக்கிளுக்கு ரூ.200/— வீதம் (ரூபாய் இருநூறு மட்டும்) அதிக பட்சமாக செலவு செய்து கொள்ளவும், செலவு மேற்கொண்ட பின்னா் தொகையினை மீள முன்பணமாக பெற்றுக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு: முதன்மை சேகரிப்பு பணிக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாமல் நடைபெற வேண்டியது மிகவும் அத்தியாவசியமாக இருப்பதால் பொது சுகாதார நலன்கருதி மேற்படி முன்பணம் முதல் மூன்று மாதஙகளுக்கு அனுமதிக்கலாம். மூன்று மாதஙகளுக்கு பின்னா் உள்ளூா் விலைப்புள்ளிகள் மூலம் வருடாந்திர பணியினை தகுதியுள்ள பணிமனைகளை (Work shop) தோ்வு செய்து ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

எச்1/1570/08

**<u>தீர்மானம் எண்: 68</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16) தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான சுத்த நகல் துறையிலுள்ள 5 தட்டச்சு இயந்திரஙகள் சுமார் 15 வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டது. தற்போது அலுவலகத்தில் கணனி மூலம் எல்லா கடித போக்கு நடைபெறுவதால் தற்சமயம் தட்டச்சு இயந்திரஙகளுக்கு வேலையில்லாமல் கிடப்பில் இருக்கிறது. இவ் இயந்திரஙகள் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | இயந்திரம் பெயர் | இயந்திரம் எண் | வாஙகப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1. | Godrej – Tamil Typewriter | 337441 | 23-11-1983 |
| 2. | Godrej – Tamil Typewriter | 613296 | 4-6-1990 |
| 3 | Godrej – English Typewriter | 599633 | 4-6-1990 |
| 4. | Godrej – Tamil Typewriter | 613272 | 9-4-1990 |
| 5. | Godrej – English Typewriter | 600967 | 9-4-1990 |

மேற்படி இயந்திரஙகளை பொது ஏலம் விட மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

இ5/00561/08

**<u>தீர்மானம் எண்: 69</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

17) நகராட்சி பணிகள் சம்பந்தமாக நகர்மன்றத் தலைவர் அவர்கள் 17–1–08 தேதியில் சென்னை சென்று வந்ததற்கான பயணப்படி ரூபாய் 1914/–ஐ வழஙக வேண்டி பயணப்பட்டியல் சமாப்பித்துள்ளார்கள். மேற்படி தொகையை அன்னாருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

பி4/001502/08

**<u>தீர்மானம் எண்: 70</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் மின் விசையாளர் நிலை I நிரந்தர பணி இடம் கீழ்க்கண்ட காரணஙகளினால் கீழ்க்கண்ட காலம் முதல் காலியாக உள்ளது.

| வ. எண் | பணி இடம் காலியாக உள்ள காரணம் | மின் விசையாளர் நிலை– I பணி இடம் காலியாக உள்ள காலம் |
|---|---|---|
| 1. | பணி ஓய்வு காரணமாக | 29–12–1992 முதல் |
| 2. | பதவி உயர்வு காரணமாக | 13–07–1995 முதல் |
| 3. | பதவி உயர்வு காரணமாக | 13–07–1995 முதல் |

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை எண் 198, நாள் 20–10–1998ல் கண்டுள்ளவாறு, குடிநீர் பராமரிப்பு பணிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறியீட்டின்படி மின் விசையாளர் நிலை Iல் மூன்று பணி இடஙகளை நியமன நாள் முதல் ஓராண்டு காலத்திற்குள் தற்காலிகமாக தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் 10–1–2000ம் தேதிய மூமு எண் 85531/99/எப்3 எண் செயல்முறை ஆணையில் அனுமதி வழஙகி உள்ளார்கள். மேற்படி செயல்முறை ஆணைப்படி, மின்

விசையாளர் நிலை I தற்காலிக பணி இடம் மூன்றும் இதுநாள் வரை பூர்த்தி செய்யப்படவில்லை

மேலே கண்ட விபரப்படி மின் விசையாளர் நிலை I நிரந்தர பணி இடம் 3, மற்றும் தற்காலிக பணி இடம் 3 ஆக மொத்தம் 6 பணியிடம் காலியாக உள்ளது. நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணியின் கீழ் இந்நகராட்சியில் மின் வினைஞர் நிலை I பணிஇடம் 6 எண்ணம் தோற்றுவிக்க அளவுகோல்படி (Norms) நிர்ணயம் செய்யலாம்.

தற்போது இந்நகராட்சியில் 3வது பைப் லைன் திட்டத்தின் கீழ் புதியதாக 170கு.வே. மின் மோட்டார் 3, 75கு.வே. மின் மோட்டார் 1, 40 கு.வே. மின் மோட்டா 4, 35கு.வே. மின் மோட்டா 2, 7.5.கு.வே மின் மோட்டார் 10, மற்றும் 500 KVA திறன் கொண்ட மின் மாற்றி (Transformer) 2. 63 KVA திறன் கொண்ட ஜெனரேட்டர் செட்1, இது தவிர ராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் ஜெனரேட்டர், மின் மாற்றி மற்றும் மின் மோட்டார்கள் நிறுவப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மின் விசையாளர்கள் போதிய அளவில் இல்லாததால் மின் மாற்றி மற்றும் மின் மோட்டார்கள் இயக்குவதிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதிலும் காலதாமதம் மற்றும் சிரமஙகள் ஏற்படுகின்றது. மேற்படி மோட்டார்கள் இயக்கப்படுவதின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரி 22 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

மேற்படி பணிகள் சீராக நடைபெற மின் விசையாளர் நிலை I பணிஇடம் மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றது. எனவே, தற்போது இந்நகராட்சியில் காலியாக உள்ள மின் விசையாளர் நிலை I நிரந்தர பணி இடம் 3, மற்றும் தற்காலிக பணி இடம் 3 ஆக மொத்தம் 6 பணி இடஙகளை, நகராட்சி நிர்வாக ஆணையர் செ.ன்னை அவர்களின் அனுமதி பெற்று பூர்த்தி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழஙகலாம்

இ2/6362/07

**<u>தீர்மானம் எண்: 71</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பூர்த்தி செய்ய அனுமதி வழஙகப்பட்டது.

19) இந்நகராட்சி புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் குடிநீர் வசதி செய்தல் பணி மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களின் சட்ட மன்ற தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் செய்ய 30–1–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு சி.ரவி | மதிப்பீட்டிற்கு ரூ. 1.80 %அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எம்.மகேந்திரன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.04 % குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ரூ.215000/– நிர்வாக அனுமதி வைக்கப்பட்டதில் ரூ.115000/– பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழஙகப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.115000/– பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 04% குறைவானதுமான திரு எம்.மகேந்திரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 229/07–08

**தீர்மானம் எண்: 72**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

20) இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களின் சட்ட மன்ற தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் செய்ய **30–1–08** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எம்.மகேந்திரன் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 07% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு சி.ரவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.71 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நிர்வாக அனுமதி ரூ.1.50 லட்சம் அனுமதிக்கப்பட்டு அதில் ரூ.0.50 லட்சம் பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழஙகப்பட்டுள்ளது. எனவே கூடுதல் செலவினம் ரூ.0.50 லட்சம் பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 07% குறைவானதுமான திரு எம்.மகேந்திரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 228/07–08

**தீர்மானம் எண்: 73**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**21)** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டூவிபுரம் 11வது தெருவில் சிறுபாலம் கட்டும் பணி மற்றும் PVC casd Slab அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.85,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழஙகலாம். மேலும் மேற்கண்ட செலவினம் கல்வி நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

ம.ப.எண்.

**தீர்மானம் எண்: 74**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

22) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மலேரியா புகை கொசு மருந்து தெளிக்கும் பணிக்கு கொசு புகை மருந்து டிராக்டர் மூலம் அனைத்து வார்டுகளிலும் அடிக்கப்பட்டு வரப்பட்டது. டிராக்டர் மூலம் புகை மருந்து தெளிப்பதால் சிறிய தெருக்களில் சென்று முழுமையாக புகை மருந்து அடிக்க இயலவில்லை. மேலும் நாள் ஒன்றுக்கு டிராக்டர் மூலம் புகை மருந்து அடிக்க 15 லிட்டர் டீசல் (15 x 36 = 540) செலவாகிறது. இந்நிலையில் வாடகை ஆட்டோ அமர்த்தி மேற்படி பணியினை மேற்கொள்ள தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி ரூ.350/– செலவாகும் என கணக்கிடப்பட்டது. அதனடிப்படையில் 8–2–08 முதல் 29–2–08 வரையிலான 22 நாட்களுக்கு ரூ.7700/– தோராய செலவின அடிப்படையில் ஆட்டோ அமர்த்தி கொசு மருந்து அடிக்க அனுமதி வேண்டப்படுகிறது

<u>குறிப்பு</u>: 1) உத்தேச செலவான ரூ.7700/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேலும் மார்ச் மாதம் முழுவதும் நீட்டிப்பு செய்வதற்கு தேவையான செலவிற்கும்

எச்3/2007/08

**<u>தீர்மானம் எண்: 75</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

23) தமிழக அரசு தனது 30–12–06ம் நாளிட்ட வருவாய் நி.மு.1 (2) துறை அரசாணை (நிலை) எண் 854ல் அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருப்போர்களுக்கு அராசாணையில் கண்டுள்ள விதிகளுக்குட்பட்டு ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி வீட்டுமனை பட்டா வழஙக உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தூத்துக்குடி வட்டாட்சியரின் 7–7–2007ம் தேதிய ந.க. அ2/1319/2007 எண் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் நகராட்சி பகுதியில் உள்ள 72 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து பட்டா வழஙக நகரமன்றத் தீர்மானம் நிறைவேற்றி ஆட்சேபணையில்லா சான்று வழஙக கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி இடங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

## <u>I அரசுக்கு சொந்தமான இடம்</u>

1. பனிமய நகர்
2. சகாயபுரம்
3. பாத்திமா நகர்
4. டூவிபுரம் மேற்கு
5. அண்ணாநகர் 11, 12ம் தெரு
6. இரயில்வே லைன் கீழ்பகுதி, காந்தி நகர் ஜார்ஜ் ரோடு
7. டூவிபுரம் 6ம் தெரு
8. போல்டன்புரம்
9. பெருமாள்புரம்
10. டூவிபுரம் 11ம் தெரு

## <u>II உப்புத் துறை மற்றும் இரயில்வே துறைக்கு பாத்தியமான இடம்</u>

1. அன்னை தெரசா காலனி (ரயில்வே)
2. மீனவர் காலனி ஜார்ஜ் ரோடு ( ரயில்வே)
3. மினி சகாயபுரம் (உப்புத்துறை)
4. சகாயபுரம் மேற்கு (உப்புத்துறை)

5. சகாயபுரம் வேளாங்கன்னி வடக்கு தெரு (உப்புத்துறை
6. மீனவர் காலனி எம்.ஜி.ஆர்.சிலை அருகில் (ரயில்வே)
7. வி.இ.ரோடு அம்பாள் அருகில் (ரயில்வே)

## III நல்ல தண்ணீர் கால்வாய் (சர்க்கார் புறம்போக்கு)

1. ஜெயிலாணி காலனி (ந.தண்ணீர் கால்வாய்)
2. 3வது மைல் சஙகர் காலனி (ந.தண்ணீர் கால்வாய்)
3. 3வது மைல் (ந.தண்ணீர் கால்வாய்)
4. வி.வி.டி.சிக்னல் எதிரில் (ந.தண்ணீர் கால்வாய்)
5. பத்திநாதபுரம் பாளைரோடு (ந.தண்ணீர் கால்வாய்)

## IV பக்கிள் ஓடையினை ஒட்டியுள்ள இடஙகள் (சர்க்கார் புறம்போக்கு)

1. அண்ணாநகர் 9வது தெரு (பக்கிள் ஓடை)
2. ஜோசப் காலனி அண்ணாகாலனி (வடக்கு பீச்ரோடு (பக்கிள் ஓடை)
3. குரூஸ்புரம் (பக்கிள் ஓடை)
4. அண்ணாநகர் வார்டு 41 (பக்கிள் ஓடை)
5. திரேஸ்புரம் அண்ணாகாலனி (பக்கிள் ஓடை)
6. கே.வி.கே.நகர் மேற்கு (பக்கிள் ஓடை)

## V தனியார்க்கு சொந்தமான பட்டா இடஙகள்

1. பர்மா காலனி
2. அண்ணாநகர் 3வது தெரு (தனியார் மயான இடம்)

## VI நகராட்சி சாலைகள்

1. வாடித்தெரு
2. ஜீவா நகர்
3. முனியசாமிபுரம் 2ம் தெரு
4. லெவிஞ்சிபுரம்
5. கிருஷ்ணராஜபுரம்
6. பக்கிள்புரம்
7. பிரையண்ட்நகர்
8. போல்டன்புரம்
9. டூவிபுரம் 8ம் தெரு
10. பெருமாள்புரம்
11. அண்ணாநகர்
12. சிவன்கோவில் தெரு எம்.ஜி.ஆர்.காலனி
13. தெற்கு காட்டன் ரோடு

## VII நகராட்சி இடஙகள்

1. போல்டன்புரம் 3வது தெரு
2. அண்ணாநகர்
3. செல்வநாயகபுரம்

மேற்படி அரசாணையின்படி இனம் Iல் தெரிவிக்கப்பட்ட அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்குவது தொடர்பாக 1 முதல் 9 வரையுள்ள அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்பை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபணையில்லை என மன்ற தீர்மான எண் 674 நாள் 31–10–07ல் ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர்க்கு அனுப்பப்பட்டுள்ளது.

இனம் IIல் குறிப்பிட்டுள்ள உப்புத்துறை மற்றும் ரயில்வே துறைக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறைப்படுத்த நகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என தெரிவிக்கலாம்.

இனம் III மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள், சர்க்கார் புறம்போக்காக இருப்பினும், மேற்கண்ட இடங்கள் நகராட்சியின் எதிர்கால திட்டங்களுக்கு தேவைப்படுவதால், மேற்படி இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

இனம் எண் Vஇல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் தனியாருக்கு சொந்தமான பட்டா இடம் என்பதால் இந்நகராட்சியால் ஆட்சேபனை இல்லா சான்று வழங்க இயலாது.

இனம் VI, VIIல் குறிப்பிட்டுள்ள இடங்கள் நகராட்சிக்கு சொந்தமான சாலை மற்றும் இடமாகும். மேற்படி அரசாணை 854 (வருவாய் துறை) நாள் 30–12–06ன்படி கோவில், புறம்போக்கு நிலங்கள், திருச்சபை மற்றும் மசூதி போன்ற வழிபாட்டு தளங்களை சுற்றியுள்ள நிலங்களை தவிர நகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நகராட்சிக்கு சொந்தமான இடம் (Own land) மற்றும் ரோடு, பாதை போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக தெளிவுரை ஏதும் இல்லை. எனவே நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் நகராட்சி ரோடு பாதை ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் வரண்முறைப்படுத்தி வீட்டு மனை பட்டா வழங்குவது தொடர்பாக அரசிடம் தெளிவுரை பெறலாம்.

இனம் Iல் குறிப்பிட்டுள்ள வ.எண் 10ல் குறிப்பிட்டுள்ள வார்டு 4, பிளாக் 31 சர்வே எண் 4034ல் உள்ள ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை என சான்று வழங்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின்படி செயல்பட மன்றம் அனுமதி வழங்கலாம்.

எப்1/9357/07

**<u>தீர்மானம் எண்: 76</u>**

1) பொருளில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 9 வரையில் கண்டுள்ள அரசுக்குச் சொந்தமான இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபனையில்லை என நகர்மன்ற தீர்மான எண் 674 நாள் 31–10–07இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது வரிசை எண் 10,டூவிபுரம் 11ஆம் தெரு வார்டு 4, பிளாக் 31, நகரளவு எண் 4034இல் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க அனுமதிக்கப்படுகிறது.

2) இனம் எண் II, III மற்றும் IV–இல் கண்டுள்ள குறிப்பு அனுமதிக்கப்பட்டது. இனம் எண் Vஇல் குறிப்பிட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான பட்டா இடங்களான பர்மா காலனி, அண்ணாநகர் 3ம் தெருவில் கண்டுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க சம்பந்தப்பட்ட தனியாரின் ஒப்புதல் பெற்று ஆவணங்கள் தயாரித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கிறது.

3) இனம் எண் VIஇல் கண்டுள்ள
1) வாடித்தெரு (வார்டு எண் 2, பிளாக் 3, நகரளவு எண் 40)
2) எம்.ஜி.ஆர்.காலனி (வார்டு 3, பிளாக் 7, நகரளவு எண் 1120/1ஏ
3) லயன்ஸ்டவுண் (வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண் 1142, 1144)
4) ஜீவா காலனி (வார்டு 4, பிளாக் 8, நகரளவு எண் 1604/3, 1604/7)
5) டூவிபுரம் 8வது தெரு (வார்டு 4, பிளாக் 21ஏ, நகரளவு எண் 3459/1ஏ1டி)
6) போல்டன்புரம் (வார்டு 2, பிளாக் 28, நகரளவு எண் 3308) ஆகிய பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறின்றியும் எதிர்கால பயன்பாட்டிற்குத் தேவைப்படாததாலும் பயனாளிகள் 30 (முப்பது) வருட காலமாக குடியிருந்து வருவதாலும் இவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கிட நகர்மன்றம் அனுமதி அளிக்கிறது.

4) மேலும் 1) டூவிபுரம் 10வது தெரு ஜி.ஆர். நத்தம் வார்டு எண் 4, பிளாக் எண் நகரளவு எண் 3978
2) பாத்திமா நகர் ஜி.ஆர்.நத்தம் வார்டு எண் 2, பிளாக் எண் 3, நகரளவு எண் 50/274
3) பிரையண்ட்நகர் 13வது தெரு ஜி.ஆர்.நத்தம் வார்டு சி, பிளாக் எண் 77 நகரளவு எண் 150
மேற்கண்ட மூன்று அரசு நிலஙகளில் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கிட இந்நகர்மன்றம் அனுமதி அளிக்கிறது.

5) பெரியசாமிநகர் (வார்டு பி, பிளாக் 20, நகரளவு எண் 1 மற்றும் சர்வே வார்டு பி, பிளாக் 24, நகரளவு எண் 2)இல் விளையாட்டு மைதானமாக உள்ள பொ உபயோக இடம் 30 (முப்பது) வருட காலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியில் குடியிருந்து வரும் சுமார் 210 குடியிருப்புதாரர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கிட இந்நகர்மன்றம் அனுமதி அளிக்கிறது.

6) நகராட்சி சாலை மற்றும் இனம் எண் VII–இல் கண்டுள்ள நகராட்சி இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க அரசாணையில் தெளிவுரை இல்லை என்பதால் அரசிடம் தெளிவுரை பெற்று முடிவு செய்ய இந்நகர்மன்றம் தீர்மானிக்கிறது.

24) தூத்துக்குடி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2008–09ம் வருடம் (அதாவது 1–4–08 முதல் 31–3–09 முடிய) அனுபவித்துக் கொள்ளும் உரிமம் அல்லது அதில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், ஏலம் செல்லாத இனஙகளை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. 2008–09ம் ஆண்டு ஏல நிபந்தனைகள் மற்றும் அதன் தொடர்பான அறிவிக்கை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

# உரிமம் இனங்கள் விபரம்

| வ எண் | உரிமம் விபரம் | முன்பணத் தொகை | மின் கட்டண காப்பீடு பொறுப்புத் தொகை | உரிமம் காலம் |
|---|---|---|---|---|
| 1 | விக்டோரியா தொடர்சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் நகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மீன் சந்தை வியாபாரிகளுக்கு தட்டுமுட்டு சாமான்கள் சப்ளை செய்து கட்டணம் வசூலிக்கும் உரிமை | 200000 | 5000 | 01-4-2008 முத 31-3-2009 வ ஓராண்டுக்கு |
| 2 | எஸ்.எஸ் தெரு நகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25000 | 5000 | ,, |
| 3 | சிதம்பரநகர் நகராட்சி சந்தையில் உள்ள கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25000 | 5000 | ,, |
| 4 | கீழரதவீதி தொடர்ச்சி நகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் கீழரதவீதி சாலை ஓரக் கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 10000 | 5000 | ,, |
| 5. | கோபால்சாமி தெரு நகராட்சி சந்தையில் உள்ள கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 5000 | 5000 | ,, |
| 6. | தச்சர் தெரு நகராட்சி சந்தையில் உள்ள கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 5000 | 5000 | ” |
| 7 | நகராட்சி புதிய பே:ருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேரூந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து கட்டணம் வசூலிக்கும் உரிமை | 75000 | -- | ” |
| 8 | நகராட்சி புதிய பே:ருந்து நிலையத்திலுள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25000 | 5000 | ” |
| 9 | நகராட்சி புதிய பே:ருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 15000 | 5000 | ” |
| 10 | நகராட்சி புதிய பே:ருந்து நிலையத்தில் பே:ருந்து நுழைவு வாசலுக்கு அருகாமையிலுள்ள நகராட்சி நவீன் கட்டணம கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 15000 | 5000 | ” |
| 11 | நகராட்சி புதிய பே:ருந்து நிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | 5000 | -- | ” |
| 13 | நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் செய்திதாள் தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | 2000 | -- | ” |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக்கொள்ளும் உரிமை | 1000 | -- | ” |
| 15 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் எட்டு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 50000 | -- | ” |
| 16 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 30000 | 5000 | ” |
| 17 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தினுள்கீழ்புறம் மற்றும் மேல்புறமுள்ள சைக்கிள் நிறுத்தும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25000 | 5000 | ” |
| 18 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | 15000 | -- | ” |
| 19 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் செய்திதாள் தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | 10000 | -- | ” |
| 20 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் தலைச்சுமை மூலம் வளையல் கூவி விற்பனை செய்யும் உரிமை | 1000 | -- | ” |
| 21 | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடைபார்க்கும் இயந்திரம் நிறுவிக்கொள்ளும் உரிமை | 2000 | -- | ” |
| **22** | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள 5 இடஙகளில் விளம்பரம் செய்யும் உரிமை | **1000** | **–** | |
| **23** | நகராட்சிக்கு சொந்தமான ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **15000** | **5000** | |
| **24** | நகராட்சிக்கு சொந்தமான காளை மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **15000** | **5000** | |
| **25** | நகராட்சி தெற்கு காட்டன் ரோட்டிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **10000** | **5000** | “ |
| **26** | நகராட்சி மாசிலாமணி பூஙகாவிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **5000** | **5000** | “ |
| **27** | நகராட்சி ராஜாஜி பூஙகாவிலுள்ள குளியல் அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **25000** | **5000** | “ |
| **28** | நகராட்சிக்கு சொந்தமான பாளையஙகோட்டை ரோட்டில் உள்ள வட்டத்தெப்பம் குளியல் அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **25000** | **5000** | “ |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | நகராட்சியால் தெரிவிக்கும் இடம் அல்லது பாளையங்கோட்டை ரோட்டில் நகராட்சி வணிக வளாக காம்பவுண்டுக்குள் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் நிறுத்தப்படும் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 15000 | 5000 | “ |
| 30 | நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள இடஙகளில் 15 விளம்பர பலகை அமைத்து விளம்பரம் செய்யும் உரிமை | 2000 | – | |
| 31 | நகராட்சிக்கு சொந்தமான ஏழு கட்டிடஙகளில் விளம்பரம் எழுதிக் கொள்ளும் உரிமை | 1000 | – | |
| 32 | அண்ணா பேரூந்து நிலையத்திலுள்ள தஙகும் விடுதியின் (4 டபுள் காட் ரூம், 8 சிஙகிள் ரூம்) மேற்படி 12 அறைகளுக்கும் வாடகை கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 25000 | 5000 | “ |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) 2007–08ம் வருட ஏல அறிக்கையில் உள்ள ஏல இனம் 1 முதல் 32 முடிய உள்ள இனஙகளில் வரிசை எண் 22, 23, 24, 30, 31 தவிர்த்து உள்ள இனஙகளுக்கு 2008–09ம் வருடம் அதாவது 1–4–08 முதல் 31–3–09 முடிய ஒரு வருட காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம் அல்லது கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2) 2007–08ஆம் வருட ஏல அறிக்கையில் உள்ள நிபந்தனைகளை திருத்தஙகள் செய்துள்ளவாறு 2008–09ம் வருடம் ஏல அறிக்கை நிபந்தனைகலாக அஙகீகரிக்க மன்றம் அனுமதிக்கலாம்

3) 2008–09ம் வருட ஏல அறிக்கை நிபந்தனைகள் குறித்த புத்தகம் 300 எண்ணம் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடவும் அதற்குரிய செலவுத் தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4) 2008–09ம் வருட ஏல அறிக்கையை பத்திரிக்கையில் விளம்பரம் செய்யவும் அது வகைக்குரிய செலவு தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/16294/07

<u>தீர்மானம் எண்: 77</u>

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது